# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# *Wooden Vessels in the Sea Voyages of the Ancient Tamils at Pattinapalai*

**P.Ramkumar,** *Research Scholar, (Ref.BDU2020632778653, dt:12.06.2023)Department of Tamil, A.Veeraya Vandayar Memorial Sri Pushpam College (A), Poondi-613 503, Thanjavur district, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University) ORCiD:* https://orcid.org/0009-003-7964-8036

**Dr R.Deepa,** *Associate Professor — Research Advisor, Department of Tamil, A.VeerayaVandayar Memorial Sri Pushpam College (A), Poondi-613 503, Thanjavur district, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University) ORCiD:* https://orcid.org/0009-0000-9349-1950

***Abstract***

*Tamils of the Sangam period excelled not only in life but also in trade and economy it is possible to know through the Sangam literature. Among them, the book Pattinapalai, which is included in this research article, mentioned to the field in which the leader who goes on a journey is involved. It is understand that maritime trade, foreign trade, international trade are functioned with extraordinary in ancient period and barter trade also excelled. Based on this, this research article aims to describe the trade condition of the Ancient Tamils, export and import, trade connections, acquiring economic system, traditional (thinai - five-land) economy, barter economy, market economy, customs economy are explained through Pattinapalai.*

***Keywords:*** *White Salt, Saltpeter, Acquiring Economic, Yavanar, Nimirparippuravi, Barter, Kavinvadi, Venkal amiztham, Sampoonadham, Ulku, Toll.*

# பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்

**ப.ராம்குமார்,** முனைவர் பட்ட ஆய்வாளர், (Ref.BDU2020632778653, dt:12.06.2023) தமிழ்த்துறை, அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (த), பூண்டி — 613 503, தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ORCiD: https://orcid.org/0009-003-7964-8036

**முனைவர் இரா.தீபா,** இணைப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (த), பூண்டி — 613 503, தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ORCiD: https://orcid.org/0009-0000-9349-1950

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலத் தமிழர் வாழ்வியலிலும் மட்டுமின்றி வாணிபப் பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கினர் என்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. அவற்றுள் இவ்வாய்வுக் கட்டுரைக்கு உட்படுத்தப்பட்ட பட்டினப்பாலை என்னும் நூலானது 'வினைமேற் செல்லும் தலைவன் செலவழுங்கிய துறையைக் குறிக்கிறது. கடல் வாணிகம், வெளிநாட்டு வாணிகம், பன்னாட்டு வாணிகம் போன்றவை பழம்காலத்தில் சிறப்புடன் செயல்பட்டன என்பதையும் பண்டமாற்று வாணிபமும் சிறந்து விளங்கியது என்பதுவும் இதனால் அறியமுடிகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழரின் வாணிப நிலை, ஏற்றுமதி இறக்குமதி, வாணிபத் தொடர்பு, பொருளீட்டல் முறை, திணைப்பொருளாதாரம், பண்டமாற்றுப் பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம், சுங்கப் பொருளாதாரம் போன்றவற்றை பட்டினப்பாலை வழி எடுத்துக் கூறுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** வெள்ளை உப்பு, வல்வாய்ப் பஃறி, பெருளீட்டல், யவனர், நிமிர்பரிப்புரவி, பண்டமாற்று, கவின்வாடி, வெண்கல் அமிழ்தம், சம்பூநதம், உல்கு, சுங்கம்.

**முன்னுரை**

நம் தமிழ்மொழியான தாய்மொழி தொன்மை வாய்ந்த மொழியாகும். பிற மொழிகளில் இருந்து தனித்தியங்கும் மொழியாகவும் பெருமை பெற்று திகழ்கின்றது. ஐந்திணை நிலங்களில் வாழும் மக்களின் வாழ்வியல் செய்திகளையும் அந்தந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்றார் போல மக்கள் தங்களின் நுண்ணறிவின் மூலம் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதையும் இலக்கண இலக்கியங்களின்வழி நன்கு அறிய முடிகின்றது. தமிழர்கள் தங்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிட பல்வேறு தொழில்களைக் கண்டு தேர்ந்து திறம்பட செயலாற்றினர். தமிழர்கள்

மரபுவழிப்பட்ட தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்ததோடு நிலமும் பொழுதும் தொழில்வளம் சிறக்க துணைபுரிந்தன. தொழில் — தொழில் சார்ந்த வாழ்க்கை சூழல்களைப் பற்றிய செய்திகளை சங்க இலக்கியத்தில் பல பாக்கள் பதிவு செய்துள்ளன. அவற்றுள் கடல் வாணிபம் பற்றியும், அதற்குத் துணைநின்ற மரக்கலங்கள் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை தோற்றம் பெறுகிறது.

**வாணிக நிலை**

உப்புக்கு மாற்றாக நெல்லைப் பண்டமாகப் பெற்றனர் என்பதனை,

**வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லோடு வந்த வல்வாய்ப் பஃறி (29-30)**

என்ற அடிகள் உறுதிப்படுத்துகின்றன.

**வடமலை பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலை பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின் (187- 193)**

என்ற அடிகள் பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை எடுத்துகூறுகிறது.

**தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்(209- 211)**

என்ற அடிகள் பழங்காலத்தமிழர் வாணிபம் அறம் சார்ந்ததாக இருந்தது என்பதையும்,

**மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் காலந்தினி துறையும்**
**முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் (216-218)**

என்ற அடிகள் உள்நாட்டு அயல்நாட்டு வாணிகம் காவிரிப்பூம்பட்டினத்தில் பெருகி வளர்ந்ததால் பல மொழிகள் பேசும் மக்களும் அங்கு தங்கி இருந்தனர் என்பதனை சான்று பகர்கின்றன. உணவு அளிக்கும் அத்திரசாலைகளும்,சமயம் சார்ந்த பள்ளிகளும், புலவர் சொற்போர் புரிந்த இடங்களும் வாணிபப் பொருளாதார வளர்ச்சியை உறுதி படுத்துகின்றன

**அகல்நகர் வியன்முற்றத்துச்**
**சுடர்நுதல் மடநோக்கின்**

**நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்**

**கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை (20-23)**

முற்றத்தில் உலரும் தானியங்களைத் தின்னவரும் கோழிகளை விரட்டப் பெண்கள் தங்கள் காதுகளில் அணிந்திருந்த தங்கக் குழைகளைக் கழற்றி எறிவர். என்ற சோழ நாட்டுப்பொருளாதார்ச் சிறப்பினையும் பட்டினப்பாலை பாடலடி எடுத்து இயம்பியுள்ளது

**கலங்களின் வகைகள்**

கடல்கடந்து வாணிபம் செய்வதற்கு ஏற்ற கப்பல்களையும் தமிழக மக்கள் அக்காலத்தே மிகுதியாக இருந்தனர். கட்டுமரம், ஓடம், புணை, படகு, பரிசல், தோணி, திமில், அம்பி, வங்கம், நாவாய், கப்பல் முதலியவற்றை நீர்ப்பரப்பில் பயணத்திற்கு என்று உருவாக்கினர்.

**பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்**

**அறிமுக அம்பியும் அருந்துறை இயக்கும்**

**(சிலம்பு.புறஞ்சேரி. 76 - 177)**

**வங்கம் ஏறினன் மணிபல்லவத்திடை (மணி.25:126)**

போன்றவை கல வகைகளுக்கு காப்பியச் சான்றாகும். மன்னனுடைய கோட்டை கப்பல் போன்று காட்சி அளித்தது என்பதை,

**பிணங்கு கதிர்க் கழனி நாப்பண் ஏமுற்**

**றுணங்கு கலன் ஆழியிற் தோன்றும்**

**ஓரெயின் மன்னன் (புறம். 338:10-12)**

**உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்**

**புலவுத்திரைப் பெருங்கடல் நீர் இடைப்போழ (அகம்.255:1-2)**

என்று புறநானூறும் அகநானூறும் பகர்கிறது.

**மரக்கலங்கள்**

சங்ககால மக்கள் கடலில் சென்று மீன்பிடிக்கச் செல்வதற்கும் வாணிப நோக்கத்தில் பயணம் செல்வதற்கும் பல்வேறு வகையான மரக்கலங்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஆரம்பகால கட்டத்தில் மரங்களை இணைத்துக் கட்டிய கட்டுமரங்களைக் கொண்டு மீன்பிடித் தொழிலைச் செய்து வந்தனர் என்பதை,

**பெறுநீர் கூட்டம் புனையொடு புக்கும் (அகம்.280:9)**

என்ற பாடலடி விளக்குகிறது. பெரும்பாலும் வலைகளை வீசி மீன் பிடிப்பதற்குக் கட்டுமரங்களும் படகுகளுமே பெருந்துணையாக இருந்துள்ளன. திமில், ஓடம், தோணி, அம்பி, பஃறி போன்ற சிறியவகை மரக்கலங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இதில் திமில் என்பதே

பெரிதும் பயன்பட்டுள்ளது. நாவாய், வங்கம், கலம் போன்ற பெரிய வகையான மரக்கலங்கள் வாணிப நோக்கில் தொழில் செய்ததையும் சங்க இலக்கியப் பாடல்கள்வழி அறியமுடிகிறது.

**சிறிய மரக்கலங்கள்**

**திமில்**

தமிழ் அகராதி திமில் என்னும் சொல்லுக்குக் கட்டுமரம், கலம் மற்றும் கப்பல் போன்ற பல பெயர்களைக் குறிப்பிடுகிறது. திமில் என்னும் இக்கலமானது பெருவாரியாக மீன்பிடித் தொழிலுக்குப் பயன்பட்டது. குறிப்பாகச் சுறாமீன் வேட்டைக்கு அதிகம் பயன்பட்டது. இவ்வகையான திமில்கள் மிகவும் திண்மையும் உறுதியும் கொண்டவைகளாகும். மூன்றும் ஐந்துமாகச் சேர்த்து முறுக்கிய கயிறுகளை எறி உளியில் பிணைத்துக் கொண்டு நள்ளிரவிலே மீன் வேட்டைக்குத் தீப்பந்தங்களை ஏற்றிக் கொண்டு எளிதில் சிக்காத பெரிய சுறாமீன்களைக் குறிவைத்துத் தாக்கிப் பிடிப்பார்கள். பின்னர் பெருமீன்களை அதிகம் பிடித்த மகிழ்ச்சியோடு கரை திரும்புவர். பின் தன் சுற்றத்தோடு கள்ளினை உண்டு மகிழ்வர் என்பதனை,

**நோன்புரிக் கயிறுகடை யாத்த கடு நடை எறிஉளித்**
**தின்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ**
**நடுநாள் வேட்டம் போகி வைக்கறைக்**
**கடல்மீன் தந்து கானற்குவைஇ**
**ஓங்கிரும் புன்னை வரி நிழல் இருந்து**
**தேங்கமழ் தேறல் கிளையொரு மாந்திப்**
**பெரிய மகிழும் துறைவன் (நற்.388:2-9)**

என்னும் பாடல் பதிவு செய்துள்ளது. நெய்தல் நிலப் பரதவர்கள் வலிமையான படகுகளில் ஏறிச் சென்று மூங்கில் கழியில் பொருத்தப்பட்டுள்ள கூர்மையான எறியுளியால் சுறாமீன்களை வேட்டையாடுவர். இதனை,

**வாங்குவிசைக்**
**கொடுந்திமில் பரதவர் கோட்டுமீன் ஏறிய (குறுந்.304:3-4)**

என்ற பாடலடியும், கீழைக்காற்று கடுமையாக வீசியதால் திமில்கள் பழுதடைந்து கரையில் கிடக்கும். அப்பழுதினை நீக்கிப் புதுப்பித்துத் தொழிலுக்குக் கொண்டுச் செல்வார்கள் என்பதனை,

**கொண்டலொடு குருஉத் திரைப்புணரி உடைத்தரும் எக்கர்ப்**
**பழந்தமிழ் கொன்ற புதுவலைப் பரதவர் (அகம்.10:9-10)**

என்ற பாடலடியும் விளக்குகின்றன. இவ்வகையான திமில்களில் வலைகளைக் கொண்டு மீன்வேட்டம் செய்ததை நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், கலித்தொகை, மதுரைக்காஞ்சி,

திணைமாலை, களவழி போன்ற நூல்களிலும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இத்திமில்களைக் கொடுந்திமில், நெடுந்திமில், திண்திமில், நிரைதிமில் போன்றஅடைமொழியிட்டும் அழைத்துள்ளனர்.

**அம்பி**

அம்பி என்னும் கலம் சிறிய மரக்கல வகையைச் சார்ந்ததாகும். அம்பி என்ற சொல் நீர், கடல் எனப் பொருள்படுகிறது. இச்சொல்லானது அம்பி என்னும் சொல்லிலிருந்து திரிந்ததாகும். மேலும், பண்டைய காலத்தில் அம்பி என்பது பல்வேறு முகத்தோற்றங்களைக் கொண்டிருந்ததைச் சங்கப்பாடல்கள் வழி அறியமுடிகின்றது. இதன்வாயிலாக அம்பி என்னும் கலங்களை யானைக்கும் எருமைக்குமான உருவ ஒற்றுமையினைக் கொண்டிருப்பதாக,

**வென்மை தண்டா எறியுறு பறந்தலைக்**
**கொம்மை வாடிய இயவுள் யானை**
**நீர் மருங் கறியாது தேர்மருங் கோடி**
**அறுநீர் அம்பியின் நெறி முதல் உணங்கும் (அகம்.29:15-18)**

என்னும் பாடல் குறிப்பிடுகிறது. தவிர நீர் வற்றிய ஆற்றுமணலில் கிடக்கக்கூடிய அம்பியானது, வலிமை இழந்த யானை வீழ்ந்து கிடப்பது போலிருக்கும் என்றும் பகர்கிறது. இதன்மூலம் அம்பி என்னும் கலமானது கடல்நீரில் மட்டுமின்றி ஆற்றுநீரிலும் பயன்பட்டிருக்கிறது என்பதை அறியமுடிகின்றது.

**வடிகதிர் திரித்த வல்ஞாண் பெருவலை**
**இடிக்குரற் புணரி பௌவத்து இருமரர்**
**நிறையப் பெய்த அம்பி காழோர்**
**சிறை அருங் களிற்றின் பரதவர் ஓய்யும் (நற்.74:1-4)**

பரதவர்கள் வலிமையான கயிற்றாலான பெரிய வலைகளை அம்பிகளில் ஏற்றிக்கொண்டு கடலுக்குள் செல்லும் காட்சியானது, கரிய யானையை இழுத்துச் செல்வது போலக் காட்சியளிக்கும் என்பதையும் பாடல் விளக்குகிறது. மேலும் அம்பி பற்றிய செய்திகளைப் பெருங்கதை, கம்பராமாயணம், சிலப்பதிகாரம், போன்ற நூல்களிலும் காணமுடிகின்றது. சிங்கம், யானை, எருமை, குதிரை என தான் காணும் எல்லாப் பொருள்களிலும் தம் நுண்ணறிவைச் செலுத்தி வடிவமைத்துள்ளான் பண்டைய தமிழன்.

**முடிவுரை**

சங்ககாலத்தில் கடலும் கடல்சார்ந்த நில மக்களும் தமது வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைக் கடல்சார்ந்த தொழில் மூலமாக ஈட்டி வளமான வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளனர். அம்மக்கள் கடல்மேற் சென்று மீன்பிடிப்பதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு

வணிகம் மேற்கொள்ளவும் மரக்கலங்களையே பயன்படுத்தியுள்ளனர். மீன்பிடித் தொழிலை முதன்மைத் தொழிலாகவும், அதுசார்ந்த வணிகத்தை அடுத்தும் கொண்ட சங்ககால மக்கள் அதற்குப் பயன்பட்ட மரக்கலங்களைத் தமது வாழ்வாதார செல்வமாகக் கருதி உயர்வாகக் கருதி பாதுகாத்து வந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உள்நாட்டினரோடும் தமிழகத்திலிருந்து பல்வேறு நாடுகளுக்குச் சென்று அயல்நாட்டினரோடும் வணிகம் செய்தனர் என்பதையும் சங்கப்பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. மேலும் கப்பல் கலையில் சிறந்தவர்களாகவும் கடல் வணிகத்தில் புகழ் பெற்று விளங்கினர் என்பதையும் இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

**துணைநூற் பட்டியல்**

குருசாமி, ம.ரா.போ. *பாரதி பாடல்கள் ஆய்வுப்பதிப்பு.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

கௌமாரீஸ்வரி, எஸ். *அகநானூறு.* சென்னை: சாரதா பதிப்பகம்.

கௌமாரீஸ்வரி, எஸ். *புறநானூறு.* சென்னை: சாரதா பதிப்பகம்.

சுபாஷ் சந்திரபோஸ், ச. *தொல்காப்பியம் சொல்லதிகாரம்.* தஞ்சாவூர்: இயல் பதிப்பகம்.

பசுபதி, ம.வே. *செம்மொழித்தமிழ்.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

பெருமாள், எ.கா. *தமிழக வரலாறும் பண்பாடும்.* மதுரை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *சிலப்பதிகாரம் தெளிவுரை.* சென்னை: உமா பதிப்பகம்.

***References***

*Gurusami, Ma.Ra.Po. **Bharathi Paadalgal Aayvu Pathippu.** Thanjavur: Tamil University.*

*Gowmareeswari, S. **Akananuru.** Chennai: Saradha Pathippagam.*

*Gowmareeswari, S. **Purananuru.** Chennai: Saradha Pathippagam.*

*Subash Chandrabose, S. **Tholkaappiyam Solladhikaaram.** Thanjavur: Iyal Pathippagam.*

*Pasupathi, Ma.Ve. **Semmozhi Tamil.** Thanjavur: Tamil University.*

*Perumal, E.Ka. **Thamizhaga Varalaarum Panpaadum.** Madurai: New Century Book House, Madurai.*

*Manickavasagan, Gna. (U.Aa.). **Silappadhikaaram Thelivurai.** Chennai: Uma Pathippagam.*

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com